
பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 05 சனிக்கிழமை 17.02.2024 அதிர்வு 201

## முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம இன்று காலமானார்!



ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான காமினி 04▶




# தமிழ்க் கட்சிகள் பிளவு: இந்தியத் தூதர் கவலை

## நேரில் தெரிவித்தார் என்கிறார் சிவஞானம்

(பிரபாகரன் டிலக்சன்)

"தமிழ்க் கட்சிகளின் பிளவு வருத்தமளிக்கின்றது என்றும், இந்தக் கட்சிகள் மேலும் பிளவடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, தமிழ் அரசியல் பிரமுகர்களிடம் வலியுறுத்தினார்."

- இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட சிலரை நேற்று இரவு யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சி.வி.கே. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார். 04▶

# யாழ். சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை நேரில் சந்தித்த ஜீவன்

மீனவர் பிரச்சினைக்கு விரைவில் நிலையானதொரு தீர்வைக் காணுமாறு இந்திய அரசிடமும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள 43 தமிழக மீனவர்களை அமைச்சர் நேரில் சென்று சந்தித்தார். அவர்களிடம் சுகம் விசாரித்ததுடன், அவர்களுக்குள்ள 04▶





# நிந்தவூர் கடலில் மூழ்கி மாயமான 2 மாணவர்களும் சடலங்களாக மீட்பு






**(நூருல் ஹுதா உமர்)**

அம்பாறையில் கடலில் மூழ்கி மாயமான பாடசாலை மாணவர்கள் இருவரும் இன்று முற்பகல் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மாளிகைக்காடு – சாய்ந்தமருதைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 8 பேர் நிந்தவூர் பிரதேச கடலில் நேற்றுப் பிற்பகல் படம் எடுத்து விளையாடிக் கொண்டிருந்தபோது அதில் இருவர் கடலில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போயிருந்தனர். அவர்களின் சடலங்களே இன்று மீட்கப்பட்டுள்ளன.

மாளிகைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த சூர்தீன் முஹம்மட் முன்சிப் (வயது 15), சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த முஹம்மட் இல்ஹம் (வயது 15) என்பவர்களே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கடலில் மூழ்கிக் காணாமல்போன மாணவர்களைச் சம்பவத்தைக் கேள்வியுற்ற நிமிடம் முதல் மீனவர்களும், பொதுமக்களும் தேடி அலைந்த நிலையில் இறுதியில் சடலங்களாக மீட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி எம்.ரீ.சபீர் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டார்.

மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர்களான எம்.ஏ. பசீல், ஆர். விமலேந்திரன் தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.








# இலங்கையில் தமிழக மீனவர்களுக்குச் சிறைத் தண்டனை: எதிர்ப்புத் தெரிவித்து இராமேஸ்வரத்தில் இன்று போராட்டம்

## கச்சதீவு திருவிழாவைப் புறக்கணிக்கவும் தீர்மானம்

**(மன்னார் நிருபர்)**

எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூன்று தமிழக மீனவர்களுக்குச் சிறைத் தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றம் தீர்ப்பளித்ததைக் கண்டித்தும், நீதிமன்றத் தீர்ப்பை உடனடியாக இரத்துச் செய்ய வலியுறுத்தியும், இராமேஸ்வரம் மீனவர்கள் கச்சத்தீவு திருவிழாவை புறக்கணிப்பதுடன் இன்று முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் ஆலோசனைக் கூட்டத்தில் விசைப்படகு மீனவர்கள் முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறை முகத்திலிருந்து கடந்த மூன்றாம் திகதி மீன்பிடிக்கச் சென்று நான்காம் திகதி அதிகாலை எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இரண்டு படகுகளுடன் 23 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.

மீனவர்களின் வழக்கு நேற்று ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கை விசாரித்த நீதிபதி 23 மீனவர்களில் 20 மீனவர்களை விடுதலை செய்து உத்தரவிட்டதுடன் இரண்டு மீன்பிடி விசைப் படகு ஓட்டுநர்களான பெக்கர் மற்றும் ராபர்ட் ஆகிய இருவருக்கும் ஆறு மாத காலம் சிறைத் தண்டனையும், அதேபோல் இலங்கைக் கடற்படையால் 2019 ஆண்ட சிறைப் பிடிக்கப்பட்டு இலங்கை நீதிமன்றத்தால் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்ட மீனவர் மெல்வின் மீண்டும் எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதால் அவருக்கு ஓராண்டு சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

இந்தத் தீர்ப்பு இராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் இந்தத் தீர்ப்பை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் எனவும், சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ராபர்ட், பெக்கர், மெல்வின் ஆகிய மூன்று மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியும் இன்று இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் அனைத்து விசைப் படகு மீனவ சங்கம் சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட மூன்று மீனவர்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டு கண்ணீருடன் தங்களது சிறையில் உள்ள தங்கள் உறவினர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி கோரிக்கை வைத்தனர்.

பின்னர் கூட்டத்தின் முடிவில் எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் கச்சவில் நடைபெறவுள்ள புனித அந்தோனியார் கோயில் திருவிழாவில் கலந்து கொள்ளாமல் தமிழக மீனவர்கள் புறக்கணிக்கப் போவதாகவும், விசைப்படகு மீனவர்கள் இன்று முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும், நாளை மீன்பிடி விசைப் படகுகளில் கறுப்புக் கொடியேற்றி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தப் போவதாகவும், இராமேஸ்வரத்தில் இருந்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு மூன்று நாட்கள் நடந்து சென்று விசைப்படகு மீனவர்கள் அனைவரும் தங்களது படகு உரிமம், மீனவர் அடையாள அட்டை உள்ளிட்டவைகளை ஆட்சியரிடம் ஒப்படைக்கப் போவதாகவும் மீனவர் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்துள்ளனர்.

மேலும் தங்களது கண்டனத்தைப் பதிவு செய்யும் விதமாக இராமேஸ்வரம் மீன்பிடி அனுமதிச் சீட்டு வழங்கும் அலுவலகம் முன்பு மீனவர்கள் சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராக அவர்கள் கோஷங்களையும் எழுப்பினர்.







# மன்னார் சிறுமி வன்புணர்ந்து கழுத்து நெரித்துப் படுகொலை

## வெளிவந்தது பிரேத பரிசோதனை அறிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

மன்னாரில் 10 வயது சிறுமி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பிரேத பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

தலைமன்னார், ஊர்மனை கிராமத்தில் 10 வயது சிறுமி நேற்று சடலமாக மீட்கப்பட்ட நிலையில், இன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அதன்போதே சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனக் கண்டறியப்பட்டுள்ளது

சம்பவம் தொடர்பில் சிறுமியின் வீட்டுக்கு அருகிலுள்ள தென்னந் தோப்பில் வேலை செய்த 52 வயதான திருகோணமலை – குச்சவெளியைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சிறுமி நேற்றுமுன் தினம் மாலை காணாமல்போயுள்ளார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து பிரதேச மக்கள் தேடுதலில் ஈடுபட்டபோது, தென்னந்தோட்டத்தில் இருந்து நேற்றுக் காலை சிறுமியின் சடலம் மீட்கப்பட்டது.

சிறுமியின் தாயும் தந்தையும் புத்தளம் – பூக்குளம் கிராமத்தில் வசித்து வருகின்றனர். பாடசாலை செல்வதற்காக சிறுமியும் அவரது இரு மூத்த சகோதரிகளும் சகோதரனுடன் ஊர்மனை கிராமத்திலுள்ள அம்மம்மாவின் வீட்டில் வசித்து வந்த நிலையிலையே இந்தக் கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேலதிக விசாரணைகளைத் தலைமன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழ். சிறையில்...

பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் கூறிய தாவது:-

"யாழ்ப்பாணம் சிறையில் உள்ள 43 தமிழக மீனவர்களைச் சந்தித்தேன். அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது பற்றி எடுத்துக் கூறினேன். அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டனர். 43 மீனவர்களில் இருவர் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளனர்.

ஏனைய 41 மீனவர்களுக்கும் இலங்கை அரசு மூலமாக அல்லது எம்மால் முடிந்த உதவிகளை நிச்சயம் செய்வோம். இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என நம்புகின்றேன். இலங்கை பொலிஸார் தம்மை நன்றாக நடத்துகின்றனர் என மீனவர்கள் தெரிவித்தனர்.

வடக்கில் உள்ள மீனவர்களும் போரால் பாதிக்கப்பட்டவர்கள். சிறிய படகுகளை வைத்துக்கொண்டுதான் அவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடாது.

தமிழக மீனவர்கள் ரோலர் படகுகளைப் பயன்படுத்தி அதிகளவான மீன்களைப் பிடிக்கின்றனர். இலங்கைக் கடல் வளமும் சேதமடைகின்றது. இது கடல் சார் சட்டங்களையும் மீறும் செயலாகும். மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுமாறு இந்திய அரசிடமும், இலங்கை ஜனாதிபதியிடமும் நாம் கோரிக்கை முன்வைத்துள்ளோம்." – என்றார்.

### முன்னாள் அமைச்சர்...

ஜயவிக்கிரம பெரேரா இன்று காலமானார்.

நோய்வாய்ப்பட்டிருந்த அவர் உயிரிழக்கும்போது வயது 83.

ஜே.ஆர். ஜயவர்தன காலம் தொட்டே ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய செயற்பாட்டாளராகக் காமினி ஜயவிக்கிரம பெரேரா செயற்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார். கடைசியாக நல்லாட்சியிலும் அமைச்சுப் பதவியை வகித்தார்.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அவர் போட்டியிடவில்லை.

### தமிழ்க் கட்சிகள்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியத் தூதுவருடன் பல விடயங்கள் பற்றி உரையாடி இருந்தோம். குறிப்பாக நெடுந்தீவுக்கான போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினேன். நெடுந்தீவுக்கு அன்பளிப்பாக ஒரு படகு ஒன்றைப் பெற்றுத் தருமாறும் கோரினேன்.

அதற்கான கோரிக்கையைத் தான் சமர்ப்பிப்பார் எனவும், இலங்கை அரசுடன் இது பற்றி தான் பேசவுள்ளார் எனவும் இந்தியத் தூதுவர் உறுதியளித்தார்." – என்றார்.

'தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை தொடர்பில் ஏதும் பேசப்பட்டதா?' என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த சி.வி.கே. சிவஞானம்,

"தமிழ் அரசியல்வாதிகள் ஒவ்வொருடனும் தனித்தனியே இந்தியத் தூதுவர் கலந்துரையாடினார். என்னுடன் கதைக்கும்போது தமிழ்க் கட்சிகளின் பிளவு வருத்தமளிக்கின்றது என்று தூதுவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை பற்றி பேசப்படும் நிலையில் தமிழ்க் கட்சிகள் மேலும் பிளவடைகின்றன. இருக்கின்ற தமிழ்க் கட்சிகள் மேலும் பிளவடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தூதுவர் கூறினார்." – என்றார்.

# மட்டக்களப்பில் விபத்து: ஒருவர் பலி; மூவர் காயம்







**(பழுவூரான்)**

மட்டக்களப்பு – தன்னாமுனை பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் சிக்கி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேற்படி பகுதியில் ஓட்டோவும் டிப்பர் வாகனமொன்றும் மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் 4 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், காத்தான்குடி – சேகுல் பலாஹ் வீதியை சேர்ந்த ரஹீம் என்பவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் குழந்தை, பெண் உட்பட 3 பேர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்திற்கான காரணங்கள் எதுவும் தெரியவில்லை. ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அடக்குமுறை சட்டங்கள் ஏன்?

தேர்தலை மிக விரைவில் எதிர் நோக்க விருக்கும் அரசு, இந்தச் சமயத்தில் மிக மோசமான அடக்குமுறை சட்டங்களை வரிசையாக கொண்டு வருகின்றது. இந்தப் பொறுத்த கட்டத்தில் இத்தகைய சட்டங்களை கொண்டு வந்து, மக்கள் ஆதரவை இழக்கும் வேலையை அரசு ஏன் செய்கின்றது என்ற கேள்வி பலரின் மனதிலும் எழாமல் இல்லை.

ஏற்கனவே உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளை உதாசீனம் செய்த நிலையில், நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றியதாக அறிவித்திருக்கும் அரசின் முடிவு, சர்வதேச ரீதியிலும் உள்ளூரிலும் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்திருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம், அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா போன்ற நாடுகள், சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் காப்பகம் போன்ற சர்வதேச பொது அமைப்புகள் எனப் பல தரப்பினரும் அரசின் இந்த நடவடிக்கையைக் காட்டமாக விமர்சித்துள்ளனர். நாட்டுக்குள் பிரதானமான எதிர்கட்சிகள், ஊடக அமைப்புகள், பொது நிறுவனங்கள் எனப் பல தரப்புக்களும் கூட கண்டன அறிவிப்புகளை தொடர்ந்து வெளியிட்டு, எதிர்ப்புக் காட்டி வருகின்றன.

இந்தப் பின்புலத்தில்தான் அரசு புதிதாக அறிமுகப்படுத்தும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான விடயம் இப்போது நாடாளுமன்றுக்கு வருகின்றது.

கடந்த 45 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை காட்டுமிராண்டித்தனமானது, மனித நாகரிகத்துக்கு ஒவ்வாதது, மிக மோசமானது, கொடூரமானது என்று சர்வதேச மற்றும் உள்ளூர் அமைப்புகள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகையில், அதற்கு மாற்றான ஒன்றாகவே இப்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அரசு அறிமுகப்படுத்துகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடான சட்டம் என்ற பெயரில் முன்னரும் இரண்டு, மூன்று தடவைகள் கொண்டுவரப்பட்ட சட்டமூல வடிவங்கள் அவ்வப்போது கிளம்பிய பொது எதிர்ப்புக் காரணமாக அந்தந்தச் சமயங்களிலேயே கைவிடப்பட்டன.

தற்போது கொண்டுவரப்பட்டுள்ள சட்ட வடிவம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட நிலையில், அதற்கு எதிராக பல டசின் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றை உயர் நீதிமன்றம் விசாரித்து, வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்து விட்டது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தெரிகின்றது. அது பெரும்பாலும் வரும் செவ்வாய்க்கிழமை 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய சர்ச்சைக்குரிய அடக்குமுறைச் சட்டங்களை இந்தத் தேர்தல் சமயத்தில் அரசு கொண்டு வருவது காரணத்துடன் தான்.

ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் சமயங்களில் அரசுக்கு எதிரான பிரசாரங்கள், அவதூறு நடவடிக்கைகள், உணர்வைத் தூண்டும் விஷமத்தனங்கள் போன்றவை சமூக ஊடகங்கள் ஊடாக பெருமளவில் முன்னெடுக்கப்படும். அது தேர்தலில் தங்களுக்குப் பாதகமான - மோசமான - பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்று கருதும் அரசுத் தலைமை, அதற்கு இடமளிக்காமல், அந்த முயற்சிகளை முளையுடன் கிள்ளி அடக்குவதற்குக் கங்கணம் கட்டி நிற்கின்றது.

கொண்டுவரப்படும் புதிய சட்டங்களின் மூலம் அரசுக்கு எதிரான விஷமப் பிரச்சாரங்களை முடக்கலாம் என்பது ஆளும் தரப்பின் நம்பிக்கை. எண்ணம்.

தேர்தல் சமயத்தில் அரசுக்கு எதிராகக் கிளரும் உணர்வெழுச்சிப் பிரசாரங்கள், போராட்டங்கள், பொது எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை கட்டி அடக்குவதற்கு தனக்கு மேலதிக அதிகாரம் தேவைப்படுவதாக கருதும் அரசு அந்த அதிகாரத்தை வளைத்து போடவே இத்தகைய அடக்குமுறை சட்டங்களை எல்லாம் அவசர அவசரமாக கொண்டு வருகின்றது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கும் நாட்டை மீட்டெடுக்க வேண்டிய கட்டாயத்திலும் கடப்பாட்டிலும் மாட்டிக் கொண்டுள்ள அரசிடம் அதற்கான தீர்க்கதரிசனமான - உருப்படியான - பயனுள்ள - திட்டங்கள், யோசனைகள், பொறிமுறைகள் இல்லை.

நாட்டின் தேசிய வளங்கள், சொத்துக்களை விற்பதன் மூலமும், பொதுச் சேவைகளை தனியார் மயமாக்குவதன் மூலமும் வருமானத்தை ஈட்டி, நெருக்கடியை எதிர்கொண்டு கடக்கும் குறுக்கு யோசனையே அரசிடம் இப்போது எஞ்சியுள்ளது.

அந்த வேலையைச் செய்யும்போது அதற்கு எதிராகவும் மக்கள் கிளர்ந்தெழுவர். எதிர்ப்புப் போராட்டங்கள் வெடிக்கும் ஆபத்தும் உண்டு. அவற்றைச் சமாளிப்பதற்கும் அடக்குமுறை அதிகாரத்தை அரசு பெறவேண்டிய கட்டாயம் ஏற்படலாம்.

இந்த நெருக்கடிகள் - நெருக்குவாரங்களை - சமாளிக்கத்தான் இத்தகைய அடக்குமுறைச் சட்டங்களை இந்த சமயத்தில் அரசு விரைந்து கொண்டு வருகின்றது.




# நிலாவெளி கரையோர பகுதிகளை சுத்தம் செய்யும் பணி முன்னெடுப்பு

**(ஹஸ்பர் ஏ.எச்)**

திருகோணமலை மாவட்டத்தின் நிலாவெளி கரையோரத்தை சுத்தம் செய்யும் பணி இன்று இடம்பெற்றது.

அதிகளவான வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலா பயணிகளை கவரு வகையில் இந்த பகுதி காணப்படுகின்றது.

குறிப்பாக புறாமலை போன்ற பகுதிகள் சுற்றுலா பயணிகளை அதிகம் கவரும் இடங்களாக காணப்படுகின்றன.

இந்த துப்பரவு பணியை நிலாவெளி பகுதியில் உள்ள ஹோட்டல்கள், படகு ஓட்டுனர்கள், கரையோர பாதுகாப்பு திணைக்களம், பொலிஸார், ரைவிங் பாடசாலை, சுற்றுலாத் துறை சார் அமைப்புக்கள் என பல அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது, சுமார் 7 கிலோ மீற்றர் தூரம் வரையான கரையோர பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டன.

இதன் மூலம் சுற்றாடலை பாதுகாக்கவும் பொலித்தீன் பாவனை உட்பட ஏனைய சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருள்களை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சுமார் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.















# சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு கிழக்கு மாகாண ஆளுநரினால் ஆலோசனை!





(பழுவூரான்)

சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பான விசேட கலந் துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் மட்டக்களப்பில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான செயல் திட்டங் களை விரைவுபடுத்தி மேற்கொள்ளு மாறு துறைசார் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த கலந் துரையாடலில் மாவட்டத்தில் சுற்றுலாத் துறையில் அபிவிருத்தி மேற்கொள்ளும் போது எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட் டது.

மட்டக்களப்பில் படகு வீடுகளை அறிமுகம் செய்தல், படகுச் சவாரி மற்றும் சுற்றுலாப் பயணிகளை கவரும் விதத்தில் மிதக்கும் உணவகங்களை அறிமுகம் செய்தல் தொடர்பாகவும் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந், மட்டக் களப்பு மாநகர ஆணையாளர் எந்திரி என். சிவலிங்கம், கிழக்கு மாகாண சுற்றுலாதுறைப் பணியகத்தின் தவி சாளர் பி.மதனவாசன், பிரதித் திட்ட மிடல் பணிப்பாளர்கள், துறைசார் நிபு ணர்கள் எனப் பலர் கலந்து கொண்ட னர்.



# காத்தான்குடியில் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

நெனு உதான ஸங்தய திட்டத்தின் கீழ் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்க ளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று மாலை காத் தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

கவிஞரும் இலக்கிய ஆளுமையு மான மௌலவி யூ.எல்.எம்.பௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ எதிரி மான, நென உதான ஸங்தய ஸ்தா-பகரும் பலப்பிட்டிய பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் முகம்மட் அப் றாரி, காத்தான்குடி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.எம்.ஹக்கீம், காத் தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி கஜநாயக்க மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் ரீ.எல்.ஜௌபர் கான் உட்பட பலரும் கலந்து கொண்ட னர்

இதன்போது, நென உதான ஸங்தய திட்டத்தின் கீழ் ஸ்தாபகர் முகம்மட் அப்றாரின் திட்டத்தின் கீழ் 118 மாண வர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.



# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரரில் பாரம்பரிய புதிர் நெல் வழங்கும் நிகழ்வு

(பழுவூரான்)

கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான் தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பாரம்பரிய முறைப்படி புதிர் நெல் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது, அமுது பொங்கி சுவாமிக்குப் படைக்கப்பட்டு மக்களுக்கும் புதிர் நெல் வழங்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர் ஆலய நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

















# உலக உணவுத் திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கி வைப்பு

(சர்ஜூன் லாபீர்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தின் போது பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 262 குடும்பங்களுக்கு நிவாரண பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல் எம் அஸ்லமின் நெறிப்படுத்தலின் கீழ் இந் நிவாரணம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

உலக உணவுத் திட்டமானது சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பொருளாதார நெருக்கடி காலகட்டத்திலும் சுமார் 7000 குடும்பங்களுக்கு நிவாரண பொதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தற்போது அம்பாறை மாவட்டத்தில் வழங்கப்படும் நிவாரண வேலைத்திட்டதில் மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலகங்களில் 04 பிரதேச செயலகங்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டன. அதில் சம்மாந்துறை பிரதேச செயலகமும் ஒன்றாகும்.

இந்த நிவாரண பொதி வழங்கும் நிகழ்வில் பிரதேச செயலக கணக்காளர் ஐ.எல் பாரிஸ், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம். தாஸீம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.எம் நவாஸ், அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் எஸ்.எம் அஸாருதீன், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.என்.எம் சசீர், எம்.டி அஸ்மீர்,எம்.ஆர் பௌசான் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.
















# சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தார்

## சுகாதாரத்துறை குறைபாடுகள் தொடர்பில் விசேட கலந்துரையாடல்

“முழுமையான சிகிச்சை முறை“ எனும் தலைப்பில் கிழக்கு மாகாண மட்டத்தில் சுகாதார துறை சார்ந்து நிலவும் குறைபாடுகளை நிவர்த்திப்பது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண சுகாதார பயிற்சி நிலையத்தில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டீ.ஜீ.எம். கொஸ்தாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலானது, சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ரமேஷ் பத்திரன தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான், மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசீம், இரா.சாணக்கியன், அமைச்சுக்களின் செயலாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், கிழக்கு மாகாணத்தின் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள், திணைக்களம் சார் உயரதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள நான்கு பிராந்திய சுகாதார பணிமனைகளின் கீழுள்ள வைத்திய சாலைகளில் நிலவும் சுகாதாரத்துறை சார் பிரச்சனைகள் தொடர்பில் இதன் போது அமைச்சருக்கு சுகாதார துறை சார் அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன், மாவட்டத்திற்கு முக்கிய தேவைகளாகக் காணப்படும் பல சுகாதாரத்துறை சார் குறைபாடுகளை மாவட்டத்தின் இராஜாங்க அமைச்சர்களான சிவநேசதுரை சந்திரகாந்தன், எஸ். வியாழேந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், பைசல் காசீம் ஆகியோரினாலும் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்தோடு, மாவட்டத்தில் மிக முக்கிய பிரச்சனைகளாகக் காணப்படும் ஒசுசல, ஆளணி பற்றாக்குறை, வாகனப் பற்றாக்குறை, பின்தங்கிய கிராமங்களில் காணப்படும் வைத்திய சாலைகளை மேம்படுத்துவதன் அவசியம் மற்றும் பழமை வாய்ந்த வாழைச்சேனை வைத்தியசாலையினை தரமுயர்த்துவது தொடர்பாகவும் இராஜாங்க அமைச்சர்களால் இதன் போது அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

குறைகளைக் கேட்டறிந்து கொண்ட அமைச்சர், அவற்றிற்கான தீர்வுகளை தாம் மிக விரைவில் பெற்றுத் தருவேன் என்றும் கிழக்கு மாகாண ஆளுநரினால் நிவர்த்திக்க முடியுமான சில விடையங்களை அவர் முடித்துத் தருவார் எனவும் தெரிவித்தார்.

பாரிய செலவில் முன்னெடுக்கப்பட வேண்டிய குறைபாடுகளை அடுத்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் நிவர்த்திப்பதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.







# விவசாயிகளுடன் நாளை 4 ஆம் கட்ட பேச்சு: டில்லி பேரணி இரு நாள்கள் நிறுத்தி வைப்பு




விவசாயிகள் சங்கத்தினர் – மத்திய அமைச்சர்கள் இடையே நேற்று முன்தினம் நடைபெற்ற 3 ஆம் கட்ட பேச்சு ஆக்கப்பூர்வமாக இருந்தது என்றும் 4 ஆம் கட்ட பேச்சு நாளை தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேளாண் பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை, சாமிநாதன் ஆணைய பரிந்துரைகளை அமுல்படுத்துதல், விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், வேளாண்கடன் தள்ளுபடி, கட்டண உயர்வு இல்லா மின்சாரம், லக்கிம்பூர் கேரி வன்முறையில் பாதிக்கப்பட்டவர்கள் மீதான வழக்குகளை ரத்துசெய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் சங்கத்தினர் பஞ்சாப் மற்றும் ஹரியாணாவில் இருந்து டிராக்டர்களில் கடந்த செவ்வாய்க்கிழமை புறப்பட்டனர்.

இவர்களை பஞ்சாப் மற்றும் ஹரியாணா எல்லைகளில் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இவர்கள் டில்லியில் நுழைவதை தடுக்கும் வகையில் எல்லையில் தடுப்புகள் மற்றும் முள்வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் பஞ்சாப் – ஹரியாணாவின் ஷம்பு எல்லையில் விவசாயிகள் ராக்டர்களுடன் முகாமிட்டுள்ளனர்.

விவசாயிகள் சங்கத்தினர் மத்திய அரசுடன் கடந்த 8 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடத்திய பேச்சுகளில் தீர்வு ஏற்படவில்லை. இதனால் நேற்று முன்தினம் இரவு 3 ஆம் கட்ட பேச்சு நடைபெற்றது. மத்திய வேளாண் அமைச்சர் அர்ஜுன் முண்டா, வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல், மத்திய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த ராய் ஆகியோர் பங்கேற்றனர். பஞ்சாப் முதல்வர் பகவந்த் சிங் மான், பஞ்சாப் நிதியமைச்சர் ஹர்பல் சிங் சீமா ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்புக்குப் பின் பேட்டியளித்த மத்திய வேளாண் அமைச்சர் அர்ஜுன் முண்டா,

“விவசாயிகள் சங்கத்தினருடன் ஆக்கப்பூர்வமான பேச்சு சுமூகமாக நடைபெற்றது. இந்த பேச்சு நாளை மாலை 6 மணிக்கு தொடரும். அப்போது அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்போம்” என்றார்.

அனைத்து விடயங்கள் குறித்தும் விரிவான ஆலோசனை நடந்ததாக பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் தெரிவித்தார்.

விவசாயிகள் சங்கத் தலைவர் சர்வன் சிங் பாந்தர் கூறுகையில், “விவசாயிகள் கோரிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசித்தோம். இதற்கு நேரம் வேண்டும் என மத்திய அரசு கேட்டுக் கொண்டது. இதனால் டில்லி செல்லும் பேரணியை 2 நாள் நிறுத்தி வைக்கிறோம். சாதகமான முடிவுகள் வரவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். மோதல்கள் தவிர்க்கப்பட வேண்டும். இல்லையென்றால், டில்லி செல்லும் எங்கள் பேரணி தொடரும்” என்றார்.

விவசாயிகளின் கோரிக்கைகளை மத்திய அரசுக்கு வலியுறுத்த, சம்யுக்தா கிசான் மோர்சா என்ற அமைப்பு நேற்று பாரத் பந்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. இதனால் டில்லியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. டில்லி மற்றும் ஹரியாணா இடையே சிங்கு மற்றும் டிக்ரி எல்லைகளில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. பலஅடுக்குகளில் தடுப்புகளும், முள்வேலிகளும் அமைக்கப்பட்டிருந்தன. ட்ரோன்கள் மூலம் டில்லி பொலிஸார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# பிரியங்கா இல்லாமல் உத்தரப் பிரதேசத்துக்குள் நுழைந்தது ராகுல் காந்தியின் பாத யாத்திரை



ராமர் கோயிலில் பணக்காரர்களுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பாரத் ஜோடோ நியாய் யாத்திரை மேற்கொண்டு வருகிறார். இந்த யாத்திரை உத்தரப் பிரதேச மாநிலத்தை எட்டியுள்ளது.

பிஹாரில் இருந்து நேற்று உத்தரப் பிரதேச மாநிலத்தை வந்தடைந்தார் ராகுல். எனினும், அவரை வரவேற்க உத்தரப் பிரதேச காங்கிரஸின் முக்கிய முகமாக இருக்கும் அவரது சகோதரி பிரியங்கா காந்தி வரவில்லை.

உடல்நலம் சரியில்லாத காரணத்தால் பிரியங்கா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் அவர் வரவில்லை என்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. யாத்திரையில் பங்கேற்காவிட்டாலும், ராகுல் காந்திக்கு அவர் வாழ்த்து செய்தி அனுப்பியிருக்கிறார்.

இதனிடையே, உத்தரப் பிரதேசத்தில் முதல் இடமாக கிழக்கு உத்தரப் பிரதேசத்தின் சந்தௌலி மாவட்டத்தில் உள்ள சையத்ராஜா என்ற இடத்தில் பேசிய ராகுல்,

“இந்த யாத்திரை அநீதி, சமூக அநீதிக்கு எதிராக மேற்கொள்ளப்படுகிறது. எங்கள் போராட்டம் ஏழைகள், விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் வேலையில்லாத இளைஞர்களுக்கு நடக்கும் அநீதிக்கு எதிரானது.

ராமர் கோயில் கும்பாபிஷேகத்தை நீங்கள் அனைவரும் டி.வியில் பார்த்தீர்கள். இந்த கும்பாபிஷேக விழாவில் ஏழைகள் யாரேனும் பார்த்தீர்களா?. அல்லது எந்த தொழிலாளியையாவது பார்த்தீர்களா, விவசாயிகளையாவது பார்த்தீர்களா?. ராமர் கோயில் கும்பாபிஷேக விழாவில் இந்தியாவின் பல பணக்காரர்கள் கலந்து கொண்டனர். அங்கு அவர்களுக்கு சிவப்புக் கம்பளம் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆனால் ஏழைகளோ, விவசாயிகளோ, தொழிலாளர்களோ அங்கு காணப்படவில்லை. இது அநீதி. ஏழைகள் மற்றும் தலித்துகளுக்கு அநீதி இழைக்கப்படுவதால் வெறுப்பு அதிகரித்து வருகிறது.

இந்த யாத்திரையில் நாங்கள் நீண்ட உரைகளை பேசுவதில்லை. நாங்கள் மக்களைச் சந்திக்கிறோம், அவர்களுடன் பழகுகிறோம். இதன் மூலம் அவர்களின் பிரச்சினைகளை அறிந்து அவற்றைத் தீர்க்க முயற்சிகளை மேற்கொள்வோம். விவசாயிகள் மற்றும் ஏழைகளின் பிரச்சனைகளை ஊடகங்கள் காட்டவில்லை.” – என்றார்.

# அலக்ஸி நவல்னியின் மரணத்திற்கு ரஷ்ய அதிகாரிகளே முழு பொறுப்பு

## பிரித்தானியா தெரிவிப்பு



ரஷ்ய எதிர்கட்சி அரசியல்வாதி அலக்ஸி நவல்னியின் மரணத்திற்கு ரஷ்ய அதிகாரிகளே முழுமையாக பொறுப்பேற்க வேண்டும் என பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

பிரித்தானியாவில் உள்ள ரஷ்ய தூதகரகத்திடம் பிரித்தானியா தமது வலியுறுத்தலை விடுத்துள்ளது.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ரஷ்யாவின் எதிர்கட்சி அரசியல்வாதி அலெக்ஸி நவல்னி மரணமானார் என சைபீரிய பிராந்திய சிறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினை வெளிப்படையாக விமர்சிப்பவராக அவர், செயல்பட்டார் என்ற கருத்து பரவலாக உள்ளது.

இதன் காரணமாக பல குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையில் கடந்த 2021ஆம் ஆண்டு முதல் அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், அவரது மரணம் தொடர்பில் முழுமையாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

ரஷ்ய எதிர்கட்சி அரசியல்வாதி அலெக்ஸி நவல்னியின் மரணம் குறித்த விசாரணைக்கு அமெரிக்கா உள்ளிட்ட அதன் நட்பு நாடுகளும் அழைப்பு விடுத்துள்ளன.

# புடின் தண்டனையில் இருந்து தப்பமுடியாது: அலெக்ஸி நவல்னியின் மனைவி ஆவேசம்

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி சிறையில் மரணமடைந்தது உறுதி செய்யப்பட்டால் விளாடிமிர் புடினும் அவரது கூட்டாளிகளும் தண்டிக்கப்படாமல் போக மாட்டார்கள் என்று அலெக்ஸியின் மனைவி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அலெக்ஸி நவல்னியின் மனைவி யூலியா நவல்னயா கருத்து வெளியிடுகையில்,

“எனது கணவரின் மரணச் செய்தி ரஷ்ய அரசிடமிருந்து வந்துள்ளதால் அதில் எனக்கு சந்தேகம் உள்ளது. புடின் மற்றும் அவரது அரசை நம்ப முடியாது. அவர்கள் எப்போதும் பொய்யைத்தான் சொல்வார்கள். ஒருவேளை அந்தச் செய்தி உண்மையாக இருக்கும் பட்சத்தில் புடின், அவரது குடும்பத்தினர், அவரது நண்பர்கள், அவரது அரசாங்கம் எனது கணவருக்கு செய்த அனைத்துக்கும் பொறுப்பேற்க வேண்டும் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்த நாள் விரைவில் வரும்.

விளாடிமிர் புடினும், அவரது அரசாங்கமும் எனது நாடு,




நமது நாடான ரஷ்யாவுக்கு சமீப ஆண்டுகளாக செய்துவரும் மோசமான விடயங்களுக்கு தனிப்பட்டமுறையில் பொறுப்பேற்க வேண்டும். அதேபோல ரஷ்யாவில் நடந்து வரும் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக சர்வதேச சமூகங்கள் ஒன்றிணைய வேண்டும்.” – என்றார்.

# டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக அபராதம் விதிப்பு

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 354 மில்லியன் டொலர் அபராதம் செலுத்த வேண்டும் என நியூயோர்க் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வர்த்தக விவகாரங்களில் மேற்கொள்ளப்பட்ட மோசடி தொடர்பில் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், நியூயோர்க்கில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு மூன்று வருடங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.






# சுயதொழில் பயிற்சி முடித்த யுவதிகளுக்கு சான்றிதழ்

(எம்.எம்.றம்ஸீன்)

காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பைத்துஸ் சகாத் (கூட்டு சகாத்) திட்டத்தின் கீழ் சுய தொழில் பயிற்சியை முடித்த யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன தலைவர் ரவூப் ஏ மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வைத்தியர் திருமதி அலீமா ரஹ்மான் சிறப்புரையை நிகழ்த்தினார்.

இதில் காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன கூட்டு சகாத் திட்டத்தின் செயலாளர் அஜுன் நழீமி, நிறைவேற்று பொறுப்பாளர் எம்.எச்.ஏ.எம்.இஸ்மாயில் மற்றும் சம்மேளன உதவி தலைவர் மௌலவி எம்.ஐ. ஆதம்லெவ்வை உட்பட பலரும் கலந்து கொண்டனர் இதன் போது, 3 மாத சுய தொழில் பயிற்சியை நிறைவு செய்த 40 யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.








# அட்டாளைச்சேனை நலன்புரி அமைப்பின் புதிய அதிபர்களை கௌரவிக்கும் நிகழ்வு

(எம்.எப்.றிபாஸ்.கே.ஏ.ஹமிட்)

அட்டாளைச்சேனை நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்த கல்வி விருது விழா லொய்ட்ஸ் மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்தில் புதிய அதிபர்களாக நியமிக்கப்பட்டவர்களையும், கடந்த காலங்களில் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்ற அதிபர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு அமைப்பின் தலைவர் எம்.ஜே. எம்.அன்வர் நௌஷாத் தலைமையில் நடைபற்றது.

இந்த நிகழ்வில், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, கிழக்கின் கேடயத்தின் தலைவர் எஸ்.எம். சபீஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ கே அமீர், முஸ்லிம் காங்கிரஸின் பாலமுனை அமைப்பாளர் ஏ.எல். அலியார், முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.













# சந்தேகநபர்களுக்கு நஞ்சூட்டப்பட்ட சம்பவம் பிரதான சந்தேகநபர் தடுத்து வைத்து விசாரணை

ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சந்தேக நபர்களுக்கு விஷம் கலந்த பாலை வழங்கிய சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த சந்தேகநபர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் 4 வருடங்களாக மருந்தகம் ஒன்றில் பணியாற்றினார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமறைவாகியிருந்த நிலையில் இந்த சம்பவத்தின் பிரதான சந்தேகநபரையும், விசம் கலந்த பால் பைக்கட்டுகளை சிறைக்கு எடுத்துச் சென்ற சந்தேகநபரையும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

வத்தளை பிரதேசத்தில் மறைந்திருந்த நிலையில் விஷம் கலந்த பால் பொதிகள் அடங்கிய உணவுப் பையை ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

மேற்படி சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி அவரை 7 நாள்கள் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

விஷம் கலந்த பால் பொதிகளை அவருக்கு வழங்கிய பிரதான சந்தேகநபரான ரத்னகுமார் நிஷாந்தன் என்பவரும் கொட்டாஞ்சேனை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் அவரிடம் இருந்து ஐஸ் ரக போதைப்பொருளும் மீட்கப்பட்டதாக காவல்துறையினர் குறிப்பிடுகின்றனர்.

விஷம் கலந்த பாலை வழங்கும் திட்டத்தை தற்போது டுபாயில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் போதைப்பொருள் வியாபாரியான பழனி ரிமோஷன் என்பவரே வழிநடத்தியுள்ளார் என தெரியவந்துள்ளது.



# மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் பேலியகொடை புதிய மெனிங் சந்தையில் மரக்கறிகளுக்கான விலை இன்று சற்று வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் கெரட்டின் விலை இன்று 500 ரூபாயாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு கிலோகிராம் போஞ்சி 550 ரூபாயாகவும் பச்சை மிளகாய் 700 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும் தக்காளி மற்றும் குடைமிளகாய் கிலோ ஒன்று 800 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

# காட்டு யானைகளின் இறப்புகள் அதிகரிப்பு

நாட்டில் காட்டு யானைகளின் இறப்பு வீதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் மஞ்சுள அமரரத்தே இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் 470 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன. அவற்றில் 200 யானைகள் மனித நடவடிக்கைகளினால் உயிரிழந்துள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 83 காட்டு யானைகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளன. வெடிமருந்துகள் மூலம் 47 யானைகள் கொல்லப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த செப்டெம்பர் 27 ஆம் திகதி மாத்திரம் 11 காட்டு யானைகள் ரயில் விபத்தில் சிக்குண்டு உயிரிழந்திருந்தன என வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் மஞ்சுள அமரரத்தே மேலும் தெரிவித்துள்ளார்.



# மரத்தடியில் மயங்கி விழுந்த 4 மாணவர்கள் குருணாகல் வைத்தியசாலையில் அனுமதி

ஆரம்ப பாடசாலை ஒன்றின் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்கள் நால்வர் மரத்தடியில் மயங்கி விழுந்த நிலையில் நேற்று குருணாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக குருணாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நான்கு மாணவர்களும் மரத்தடியிலிருந்து மாத்திரைகளை உட்கொண்டனர் என அங்கிருந்த ஏனைய மாணவர்கள் கூறியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மாத்திரைகளை யாராவது இவர்களுக்குக் கொடுத்தார்களா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



# தேசிய சாரணர் ஜம்போரிக்கான பாதுகாப்பு குறித்த கலந்துரையாடல்

(ஏ.எச். ஹஸ்பர்)

தேசிய சாரணர் ஜம்போரிக்கான அனர்த்த பாதுகாப்பு மற்றும் அவசர செயற்பாட்டுத்திட்ட ஏற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடல் திருகோணமலை மாவட்ட செயலக உப ஒன்று கூடல் மண்டபத்தில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, தேசிய சாரணர் ஜம்போரியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய சுருக்கமான அறிமுகம், அவசர நடவடிக்கைக்கான ஒருங்கிணைப்பு ஏற்பாடுகள், ஏனைய பங்குதாரர்களின் மதிப்பாய்வு மற்றும் கடமைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப் பட்டது.

மேலும், எதிர்பார்க்கப்படும் அபாயங்கள், அவசரநிலை, பாதுகாப்பு, அவசர ஒருங்கிணைப்பு, வானிலை கண்காணிப்பு. முன்னெச்சரிக்கை முறைமை, பேரிடர்களுக்கான வெளியேற்ற மையங்கள், மருத்துவ வசதிகள், முதலுதவி, தீ பாதுகாப்பு நடவடிக்கைகள், அவசர உபகரணங்கள், பொருள்கள், முக்கிய அவசர வசதிகள் மற்றும் பொறுப்புகள் போன்ற பல விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ், நிர்வாக உத்தி யோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ்.குருகுல சூரிய, துறை சார் அதிகாரிகள், முப்படை களின் பொலிஸ் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







